


வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், நேற்று (16.12.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை2025 வெள்ளபாதிப்பு கணக்கெடுப்பு மற்றும் பயிர் காப்பீடு குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர், திருமதி ஆர்.ஜெயா, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன், காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.தணிகாசலம் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி, ஜெகத்ரட்சகன் எம்.பி., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, துரை சிங்காரம், துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டச் செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவு வங்கிகளின் மோசடிகள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## ஒன்றிய அரசுக்கு – கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

*புதுடெல்லி, டிச.17-*

கூட்டுறவு வங்கிகளின் விதிமீறல்கள், பணமோசடிகள் மீது திடமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதில், கூட்டுறவுத்துறை அறிமுகப்படுத்திய 'டிஜிட்டல்' முன்னெடுப்புகள் எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்ற கேள்வியும் அடங்கும்.

அமைச்சகத்தின் பதில்கள், இந்தப் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு அளிக்கும் வகையில் இல்லை.

பெருகும் ஊழல்; ஆனால், நடவடிக்கை இல்லை:



கடந்த சில ஆண்டுகளாக, பல கூட்டுறவு வங்கிகள் பிரச்சனைகளில் சிக்கி, கோடிக்கணக்கில் மக்கள் டெபாசிட் செய்த பணம் ஏமாற்றப்பட்டிருப்பதாக ஊடகங்கள் பதிவு செய்துள்ளன. நியூ இந்தியா என்ற வங்கி மட்டும் 122 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளது.

இந்த சூழலில், கூட்டுறவு வங்கிகளின் தொடர் விதிமீறல்கள் மீதும், அவர்களின் பணமோசடி மீதும் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்ற கேள்விக்கு ஒன்றிய அரசு மௌனம் சாதித்துள்ளது.

டிஜிட்டல் திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாகவே இருக்கின்றன:

கூட்டுறவு வங்கித்துறைக்காக, *Sahkar Digipay*, *Sahkar Digiloan* ஆகிய இரண்டு திட்டங்களை ஒன்றிய அரசு கடந்த மாதம் அறிவித்தது. ஆனால், இதற்கான

செயற்பாட்டு வழிமுறைகள் வெளியிடப்படவில்லை. *(Operational Guidelines)* இன்னும் இதன் அர்த்தம், அந்த திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாகவே நீடிக்கின்றன என்பது. செயற்பாட்டு வழிமுறைகள் இல்லாமல் எந்த கூட்டுறவு வங்கியும், அவற்றை நடைமுறைப்படுத்த இயலாது.

இதற்கான தேதியைக் குறிப்பிட முடியுமா என்ற கேள்விக்கு முறையாக பதிலளிக்காமல், திட்டங்களின் நோக்கங்களை மட்டுமே ஒன்றிய அரசு பட்டியலிட்டுள்ளது.

மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்த ஏதுவாகவும், அறிவிக்கப்பட்ட டிஜிட்டல் திட்டங்களை விரைவுப்படுத்தி மக்களுக்கு கூடுதல் பயனளிக்கும் வகையிலும், கூட்டுறவு வங்கிகள் பரிமாற்றம் அடைய வேண்டும். இதை விரைவில் செய்ய வேண்டியது, ஒன்றிய கூட்டுறவுத்துறையின் பொறுப்பு.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்தார்.

# 'சாகர்மாலா' திட்டத்தில் ரூ.2,89,427 கோடி மதிப்பில் 234 திட்டங்கள்!

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

*புதுடெல்லி, டிச.17-*

தென்சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் நாடாளுமன்ற மக்களவையில் துறைமுக திட்டங்கள் குறித்து கேள்விகள் கேட்டார். 6 ஆறு துறைமுகக் குழுக்களில் ஒன்றான சென்னைகாமராஜர் -கடலூர் கிளஸ்டரை 2047ம் ஆண்டுக்குள் மெகா துறைமுகக் கிளஸ்டராக மேம்படுத்த அரசாங்கம் திட்ட மிட்டுள்ளதா? சாகர்மாலா திட்டத்தின் கீழ் ரூ. 2,91,622 கோடி செலவில் 234 நவீனமயமாக்கல் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது உண்மையா? என்பன போன்ற கேள்விகளை



முன்வைத்து இருந்தார்.

இதற்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை மந்திரி சர்பானந்த சோனவால் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

கடல்சார் இந்தியா தொலைநோக்கு 2030, சென்னை -காமராஜர் கடலூர் துறைமுகத்தை 2047 ம் ஆண்டுக்குள் கிழக்கு கடற்கரையில் மெகா துறைமுகமாக மாற்றும் என்று எதிர்பார்க்கிறது. இந்த துறைமுகம் 2047 ம் ஆண்டுக்குள் ஆண்டுக்கு 300 மில்லியன் டன்களுக்கு மேல் சரக்கு கையாளும் திறனை அடைய இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

சாகர்மாலா திட்டத்தின் துறைமுக நவீனமயமாக்கல் பணியின் கீழ், ரூ. 2,89,427 கோடி செலவில் மொத்தம் 234 திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இந்த 234 திட்டங்களில், ரூ. 32,675 கோடி மதிப்புள்ள 106 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 74,743 கோடி மதிப்புள்ள 56 திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

சென்னை, எண்ணூர் (காமராஜர்) மற்றும் தூத்துக்குடி (வ.உசிதம்பரனார்) துறைமுகங்களின் நவீனமயமாக்கல், ரெயில் மற்றும் சாலை இணைப்புகள் போன்ற உட்கட்டமைப்பு இணைப்பில் முதலீடு ஆகியவை அரசாங்கத்தின் முக்கிய முயற்சிகளில் அடங்கும். மேலும், மூலோபாய இருப்பிடம், ஆழமான வரைவு துறைமுகங்கள் மற்றும் கொள்கை ஆதரவு ஆகியவை தமிழ்நாட்டை ஆசியாவின் முக்கிய கடல்சார் மையமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### டிஜிட்டல் முகவரித் தொழில்நுட்பக் கட்டமைப்பை மேம்படுத்த


# அறிவியல் நிறுவனங்களுடன் அஞ்சல்துறை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதா?

## மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

*புதுடெல்லி, டிச.17-*

டிஜிட்டல் முகவரிக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பை மேம்படுத்த, அறிவியல் நிறுவனங்களுடன் அஞ்சல் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏதும் மேற்கொண்டுள்ளதா என தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நேற்று கலந்துகொண்ட இரா.கிரிராஜன், அஞ்சல் துறை மேம்பாடு குறித்து கேள்வி எழுப்பினார். அதில், டிஜிட்டல் முகவரிக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பை ஆவணப்படுத்துவதற்காக, அறிவியல்



புதுமை மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (FSID), இந்திய அறிவியல் நிறுவனம் (IISC) ஆகியவற்றுடன், அஞ்சல் துறை ஏதேனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதா என்றும், டிஜிட்டல் அஞ்சல் சேவைத் துறையில் கிளவுட் பேஸ்டு சேவையான *AaaS* மாடல் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் சவால்களைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் சந்திரகுமார் பெம்மசானி, டிஜிட்டல் முகவரிக்கான தொழில்நுட்பக் கட்டமைப்புக்காக பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அறிவியல் புதுமை மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (FSID) மட்டுமின்றி, தொழில்நுட்ப தகவல்களுக்காக தேசிய தொலைதூர உணர்திறன் மையத்துடனும்(*National Remote Sensing Center*), விண்வெளி சார்ந்த தகவல்களுக்காக இஸ்ரோவுடனும்(ISRO), அறிவுசார் தகவல்களுக்காக தேசிய நகர்ப்புற விவகார நிறுவனத்துடனும் (*National Institute of Urban Affairs*) ஆகியவற்றுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும், அவற்றுடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதால், எந்த எதிர்கால பிரச்சனையும் இல்லாமல் முழு அமைப்பும் மிகவும் வலுவாக உள்ளதாக தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் பிரதமரின் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ்

# பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!



*புதுடெல்லி, டிச.17-*

பிரதமரின் திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார். இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு;

திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களில் முறையே ஆண்கள் மற்றும் பெண்கள் என விரிவுபடுத்தப்பட்ட தரவுகளை அரசாங்கம் பராமரித்து வருகிறதா?

இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பெண் விண்ணப்பதாரர்கள் தொடர்பான விவரங்கள் உள்ளனவா?

மேலும் இந்த திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டில் மட்டும் பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?

பல்வேறு வேலை பிரிவுகளில் வெற்றிகரமாக இடம் பெற்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பெண் பயிற்சியாளர்களின் பதிவு ..அவர்கள் பயிற்சி முடித்த விவரங்கள் என்ன?

வேலை வாய்ப்பு விகிதங்கள் மற்றும் அவர்கள் பணியாற்றிய துறைகள் மாவட்ட வாரியாக எவ்வளவு?

தையல் .சுகாதாரம் போன்ற பெண்களுக்கான இலக்கு.. திறன் முயற்சிகள் என்று ஏதேனும் உள்ளதா?

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள், அழகு மற்றும் ஆரோக்கியம், தொழில் முனைவு உள்ளிட்டவைகள் மேற்காணும் மாவட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா ?

இந்தத் திட்டத்தில் பெண்கள் பங்களிப்பை மேலும் விரிவு படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? ஆம் எனில், அதன் விவரம் என்ன?

இத்தகைய பின் தங்கிய மற்றும் அரை நகர்ப்புற மாவட்டங்களில் பிரதமரின் திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் மையங்கள், விடுதி வசதிகள், வழங்கப்பட்ட உதவி தொகை, ஆதரவு மற்றும் உள்ளூர் தொழில்களுடன் பிணைப்பு தொடர்பான விவரங்கள் என்ன?

பெண்களை மையமாகக் கொண்ட பயிற்சி நிலையங்கள் கூடுதலாக அமைக்கப்படுமா? அவ்வாறெனில், அதற்கான நடவடிக்கைகள் என்ன ?

இவ்வாறு சி.என்.அண்ணாதுரை கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை இணை அமைச்சர் விரிவான பதிலை எழுத்து மூலம் அளித்து இருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை கே.கே. நீலமேகம்

### டிசம்பர் 17 (1965)



சுயமரியாதை இயக்க காலந்தொட்டு சீர்திருத்த பெரும் பணியாற்றியவர். 'குடந்தை பெரியார்' என அழைக்கப்பட்டவர்.

நீண்டகாலம் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி துணைத் தலைவராக இருந்தவர்.

தி.மு.கழகத்தின் துவக்க காலத்தில் பொருளாளர் பொறுப்பேற்றிருந்தவர்.

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற மதிப்பும், பாசமும் கொண்டிருந்தவர்.

"தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த தங்கம் – தன்மான இயக்கத்தின் தலைதாழாச் சிங்கம் – குடந்தைப் பெரியார் நீலமேகம் அவர்கள் மறையவில்லை; மனதில் நிறைந்துவிட்டார்" என தலைவர் கலைஞர் அவர்களால் 'முரசொலி' தலையங்கத்தில் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

**விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, அறிவிப்பு!**

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ப. அண்ணாமலை அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **இரா. ஜோதி,** (36/25, மாரியம்மன் கோயில் 9வது தெரு, திருவண்ணாமலை - 606601) அவர்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16-12-2025.

**அன்னியூர் சிவா,**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

**சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!**

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சு. விஜி (எ) விஜயராஜ் அவர்கள் திருவண்ணாமலை மாநகர 1வது பகுதி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **இரா. அன்பரசு,** (39எ, அஞ்சலகத் தெரு, காட்டாம்பூண்டி கிராமம் மற்றும் அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம் - 606808) அவர்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16-12-2025.

**கார்த்திகேய சிவசேனாபதி,**
செயலாளர்
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி





பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு142, ஜோன்ஸ் சாலை, பவளவண்ணன் வாகன சுரங்கப்பாதையில் நீர்க்கசிவு ஏற்பட்டு வருவதை துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று (15.12.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு சீரமைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, தலைமைப் பொறியாளர் சங்கரவேலு, மண்டல அலுவலர், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பகுதி பொறியாளர் விஜயகுமார், செயற்பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.